**தலைப்பு 189 – பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 ஜூன் 08 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஜூலை 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்

உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

**2 நிதி மீளாய்வு**

**2.1 செலவுகள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 33 செலவு விடயங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,866,003,000 இற்கான மொத்த தேறிய ஏற்பாடுகளில் ரூபா 769,216,980 தொகையினை பயன்படுத்திய பின்னர் ரூபா 2,096,786,020 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. இந்த செலவு விடயங்களில் சேமிப்பு 23 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக உத்தியோகத்தர்களின் தின வரவு வரையறுக்கப்படல் மற்றும் திட்டமிடப்பட்டவாறு அபிவிருத்தி மற்றும் ஏனைய செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முடியாமல் போதல், கையிலுள்ள பில் பத்திரங்களை தீர்ப்பதற்காக ரூபா 344 மில்லியன் பற்றாக்குறையாக காணப்படல் போன்ற காரணங்களினால் சேமிப்பு அறிவிக்கபட்டது. | உச்சமட்ட வினைத்திறனுடன் ஏற்பாடுகள் பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | கருத்திட்ட இலக்கம் 04 மற்றும் 05 இல் அனைத்து செலவு விடயங்களுக்காக குறைநிறப்பு மதிப்பீட்டின் மூலம் மாத்திரம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த 43 செலவு விடயங்களில் 15 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 19,379,000 தொகைக்கான மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது. மீதியான 28 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 104,075,000 தொகைக்கான மொத்த ஏற்பாடுகளில் சேமிப்பு ரூபா 72,353,151 தொகையாக இருந்ததுடன், அந்த சேமிப்பு 23 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | சமூக பொலிஸ் சேவை இராஜாங்க அமைச்சு 2021.05.03 திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், அமைச்சுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த வெற்றிட எண்ணிக்கை நிரப்பப்படாமை, நிச்சயிக்கப்பட்ட வளாகம் ஒன்று காணப்படாமை, ஆரம்பத்தில் அமைச்சுக்கு சொந்தமான வாகனங்கள் காணப்படாமை மற்றும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக திட்டமிடப்பட்டவாறு செயற்படுவதற்கு முடியாமல் போதல் ஆகிய காரணங்களினால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டன. | - மேற்படி - |

## 2.2 முற்பணங்கள் வழங்கல் மற்றும் தீர்த்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த இணக்கக்கூற்றிற்கு இணங்க மீளாய்வாண்டு இறுதியில் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட 29 உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்ய வேண்டிக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,454,620 தொகையாகும். அதில், சேவை இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த கடன்மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 275,827 தொகையில் 17 வருடங்கள் பழமையான ரூபா 233,187 இற்கான கடன்மீதி ஒன்றும் காணப்பட்டதுடன், சேவையை விட்டுச்சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன்மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 260,148 தொகையில் 18 வருடங்கள் பழமையான ரூபா 160,805 இற்கான கடன் மீதி ஒன்றும் காணப்பட்டது. | 2022.05.31 திகதியளவில் ரூபா 417,838 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை கடன்மீதியை அறவீடு செய்வதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | விஷேட அதிரடிப்படையின் கலபுவாவ விவாகமானோருக்கான உத்தியோகபூர்வ வீடமைப்பு தொடர் கட்டிடம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக 2007 ஆண்டு செலுத்தப்பட்டிருந்த முற்பணத் தொகையில் இதுவரை அறவிடப்படாத ரூபா 4,917,900 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |

## 2.3 வங்கிக் கணக்குகளை நெறிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றின் படி இனங் காணப்படாத பெறுவனவுகள் ரூபா 4,103,052 தொகையும், நிதிப் பிரமாணங்கள் 396 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்காமல் | வைப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், தேறப்படாத காசோலைகள் தொடர்பாக நி.பி. 396 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நி.பி. 396(ஈ) இணங்க செயற்பட வேண்டும். |

06 மாதங்களை மிகைத்துள்ள ரூபா 48,142 தொகைக்கான 06 காசோலைகளும் காணப்பட்டன.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமப/1610738/703/033 இலக்கம் கொண்ட 2016 மே 11 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி ஐக்கிய நாடுகளின் அமைத்திப்படை கடமைக்காக விஷேட அதிரடிப் படையின் போர்சார் படையணி ஒன்று மாலி இராஜியத்தில் நிறுவுவதற்கு தேவையான ஆயுதங்கள், யுத்த வாகனங்கள், மாற்று வாகனங்கள், தொடர்பாடல் உபகரணங்கள் உட்பட ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அமைதிப்படை கடமைகளுக்காக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதன் மூலம் அந்திய செலாவணி உழைத்தல், உத்தியோகத்தர்களின் திறன் அபிவிருத்தி, சர்வதேச அனுபவங்கள் பெற்றுக்கொள்ளல், உத்தியோகத்தர்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரித்தல் மற்றும் உத்தியோகத்தர்களை முனைப்பினை ஏற்படுத்தல் போன்ற விடயங்களை குறிக்கோளாக கொண்டு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 320 உத்தியோகத்தர்களுக்கு 2016 ஆண்டின் போது பயிற்சி ஒன்றும் வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 2021 திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு ரூபா 1,205,477,623 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவில் அமைதிப்படை கடமைகளுக்காக இணையும் குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2021.12.31 திகதியில் உள்ளவாறு இந்த செயற்திட்டத்திற்கு தேவையான மீதியான வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் இறக்குமதி செய்வதற்காக ரூபா 771.69 மில்லியன் தொகை ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகியிருந்ததுடன், அந்த அனைத்து வாகனங்கள் மற்றும் உபகரணங்களை விரைவாக வழங்கி பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகளினால் அடுத்து நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த பரீட்சைக்காக பிரதிநிதிகள் குழுமத்தை தொடர்புபடுத்துவதற்காக அந்த அமைப்பை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக தாமதம் இன்றி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | விஷேட அதிரடிப்படைக்கு சாட்டப்பட்டுள்ள கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக போதியளவான மற்றும் வலுவான தொடர்பாடல் வலையமைப்பொன்று 2017 – 2020 காலப் பகுதியில 4 கட்டங்களின் கீழ் நிறுவுவதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட உபகரணங்களுக்காக 2018 ஆண்டின் போது ரூபா 159,388,294 தொகையும், பண்டங்களை விடுவிப்பதற்கான வரி என ரூபா 55,327,314 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் வரை முதலாவது கட்டத்தின் கீழான தொடர்பாடல் வலையமைப்பும் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது கட்டங்களுக்காக சீன கடன் உதவியின் கீழ் கிடைக்க வேண்டியிருந்த உபகரணங்கள் தவிர மேலும், தொடர்பாடல் உபகரணங்கள் 06 விடயங்களை சார்ந்த 894 அலகுகளுக்கான குறைவொன்று காணப்பட்டது. 2021 ஆண்டு இறுதி வரை இந்த 04 கட்டம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையினால் எதிர்பார்க்கப்பட்ட வலுவான தொலைதொடர்பு வலையமைப்பு உருவாக்குவதற்கு விஷேட அதிரடிப்படைக்கு முடியாமல் இருந்தது. | விரைவாக வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | திட்டமிட்டுள்ளவாறு குறிப்பிட்ட முறைமையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 கொண்ட பந்தி 11 இன் படி மற்றும் நிதிப் பிரமாணம் 756 இணங்க வருடாந்த பண்டக் கணிப்பீடு நடாத்தப்பட்டு தொடர்ந்துவரும் வருடத்தின் மார்ச் 15 திகதிக்கு முன்னர் அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்குரிய | விஷேட அதிரடிப்படை சிதைவுற்ற பண்டங்கள் அகற்றுதல் குறிப்பிட்ட கணித்தல் சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பொதுநிதிச் சுற்றறிக்கை 01/2020 மற்றும் நி.பி. 756 இற்கு இணங்க செயற்பட வேண்டும். |

பண்டக் கணிப்பீட்டு அறிக்கை 2022 மே மாதம் வரை சமர்ப்பித்திருக்கவில்லை. விஷேட அதிரடிப்படையின் 2020 ஆண்டிற்கான பண்ட அகற்றல் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**4 நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படாமையால் மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2021.06.10 திகதி அங்கீகரிக்கப்பட்ட பின்னர் உத்தியோகத்தர் ஒருவர் வேண்டிய போதிலும், கிடைக்கப்பெறாமையால் முறைப் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு செயற்படவில்லை. | ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படாமையால் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டமையால், அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை. | ஏற்பாடுகளுக்கு இணங்க அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |

**5 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அனுமதிக்கப்பட்ட பதவியணியில் 29 சதவீத வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிறப்பும்படி பல்வேறு சந்தர்ப்பங்களில் வேண்டிக் கொள்ளப்பட்டது. | சேவையின் தேவைப்பாடுகளுக்காக வெற்றிடங்களை நிறப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | விஷேட அதிரடிப் படையில் பொலிஸ் கொஸ்தாபல் / பொலிஸ் கொஸ்தாபல் சாரதிப் பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 7,576 தொகை எனினும், 2,504 வெற்றிடங்கள் காணப்பட்டன. அது 33 சதவீதமாகும். | காணப்படும் ஏற்பாடுகள் போதியளவாக இன்மை மற்றும் மேலதிக ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையின் காரணத்தினால் ஆட்சேர்ப்பு வரையறுக்க நேரிட்டது. | - மேற்படி - |
| (இ) | விஷேட அதிரடிப்படையின் மகளிர் பொலிஸ் கொஸ்தாபல் பதவியில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 163 தொகை எனினும் 47 வெற்றிடங்கள் காணப்பட்டன. அது 29 சதவீதமாகும். | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்கான மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |